DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.621/2024**

**P.W.2**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | ஷேக் முகம்மது சர்ஜாத் |
| Father Name | : | ஷேக் அப்துல் ரஹ்மான் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 22 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.11.2025.
( 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.)

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது மதுரை சர்வேயர் காலனியில் வசித்து வருகிறேன். நான் HCL ல் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நானும், **அ.சா.1** அன்வேஸ், **சாட்சி எண்.3** ஜீவன் குமார் ஆகியோர்கள் 24.08.2022ம் தேதியில் இரவு 07.30 மணிக்கு பணி முடிந்து மதுரை பாண்டிகோவில் பின்புறத்தில் வந்து கொண்டிருக்கும் போது, எதிரிகளில் ஒருவர் கையில் அணிந்திருக்கும் வளையத்தை பயன்படுத்தி **அ.சா.1** அன்வேஸை வலது பக்க கண்ணுக்கு அருகிலும் மற்றும் முகத்திலும் கையால் குத்தியும் அ.சா.1 அன்வேஸிடமிருந்த லேப்டாப்பையும், செல்போன் மற்றும் லேப்டாப் சார்ஜ்ஜர் ஆகியவற்றை எதிரிகள் பறித்தனர். அப்போது எதிரிகளுடன் சுமார் 6 முதல் 8 நபர்கள் இருந்தார்கள். மேற்படி அ.சா.1 அன்வேஸை மதுரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நாங்கள் வேலைக்கு செல்லும் போது தான் எவிஎஸ் பஸ் செட் பாதையை பயன்படுத்துவோம் என்றால், சரிதான். நான் **அ.சா.1** அன்வேஸ், **சாட்சி எண்.3**

ஜீவன் குமார் ஆகியோர்கள் சேர்ந்து பணிக்கு சென்று வரும்வோம். ஆஜர் எதிரிகள் **அ.சா.1** அன்வேஸிடமிருந்து லேப்டாப் மற்றும் செல்போனை எதிரிகள் பறிக்கும் போது நான் அன்வேஸ் உடன் சேர்ந்து வந்து கொண்டிருந்தேன். நான் போலீஸ் விசாரணையில் **அ.சா.1** அன்வேஸ் சத்தம் போட்டதை கேட்டு சம்பவ இடத்திற்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். போலீஸார் என்னை 24.08.2022ம் தேதியில் விசாரித்தார்கள். அதன்பிறகும் போலீஸார் என்னை விசாரித்தார்கள். போலீஸார் சம்பவ தேதியில் இருந்து இரண்டு, மூன்று நாட்கள் தொடர்ந்து விசாரித்தார்கள். மேற்படி எதிரிகளை சம்பவம் நடந்த இடத்தில் பார்த்த பிறகு இன்று நீதிமன்றத்தில் வைத்து நான் அவர்களை முதலாவதாக பார்க்கிறேன். நான் ஆஜர் எதிரிகள், **அ.சா.1** அன்வேஸிடமிருந்து செல்போன் மற்றும் லேட்டாப்பை வாங்கி பறித்ததை நேரடியாக பார்க்கவில்லை. நான் சொன்னதுபோல், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. நான் போலீஸ் விசாரணையிலும் புகாரிலும் எதிரிகள் என்னை முதலில் அணுகியதாகவும் என்னுடைய மொழி புரியாததால் **அ.சா.1** அன்வேஸிடம் சென்று லேப்டாப் மற்றும் செல்போனை பறித்து சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். **அ.சா.1** அன்வேஸ்க்கும் தமிழ் மொழி தெரியாது. **அ.சா.1** அன்வேஸ்ஸை எதிரிகள் மிரட்டினார்கள், ஆனால் தமிழில் பேசியதால் எனக்கு என்ன மிரட்டினார்கள் என்று தெரியாது.

**மறு விசாரணை –** இல்லை.

S/d – S.John Sundaral Suresh, B.Sc., M.L.,

IV Additional District and Sessions Judge, Madurai.